**பெருநகர சென்னை மாநகராட்சி**

**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 04** **நாள்: 17.03.2026**

**தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் – 2026னை முன்னிட்டு, ரிப்பன் கட்டடத்தில் உள்ள சென்னை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் தேர்தல் ஊடக கண்காணிப்பு மையம், கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, தேர்தல் நடத்தை விதிமுறைகள் 24 மணிநேரமும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் – 2026னை முன்னிட்டு, ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள சென்னை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் தேர்தல் ஊடக கண்காணிப்பு மையம், கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, தேர்தல் நடத்தை விதிமுறைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதில் 24 மணிநேரமும் சுழற்சி முறையில் இயங்கும் வகையில் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு, தொடர் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை மாவட்ட தேர்தல் ஊடகக் கண்காணிப்பு மையத்தில் தொலைக்காட்சிகள் மூலமாக தேர்தல் நடத்தை விதிகள் குறித்து கண்காணித்து, அவற்றை பதிவு செய்யும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

சென்னை மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறையின் வாயிலாக, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் பறக்கும் படைகள் (FST), நிலையான கண்காணிப்புக் குழுக்கள் (SST) மற்றும் வீடியோ கண்காணிப்புக் குழுக்கள் (VST) பணியில் ஈடுபட்டு, தேர்தல் விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை கண்காணித்து நடவடிக்கை மேற்கொள்வதை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும், வாக்காளர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து வரும் புகார்கள் மற்றும் தேர்தல் தொடர்பான தகவல்களுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் விதமாக, 1800 425 7012 என்ற கட்டணமில்லா தேர்தல் உதவி எண் மையம் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. cVIGIL செயலி மூலமாக பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் தேர்தல் தொடர்பான புகார்கள் கண்காணிப்பு மையத்தின் வாயிலாக கண்காணிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**